செ.வெ.எண்:175 நாள்:25.04.2018

திருநெல்வேல மாவட்ட மைய நூலக வளாகத்தில் நடைபெற்ற உலக புத்தக தின நிறைவு விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார். மேலும் தமிழறிஞர்களை பாராட்டினர்.

------

திருநெல்வேலி பாளையங்கோட்டை மாவட்ட மைய நூலக வளாகத்தில் மாவட்ட மைய நூலகம் மற்றும் வாசகர் வட்டத்தின் சார்பில் உலக புத்தக தின நிறைவு விழா இன்று (25.04.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு கட்டுரை போட்டி, ஓவிய போட்டி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார். மேலும் தமிழறிஞர்களுக்கு சால்வை அணிவித்து பாராட்டினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த பிப்ரவரி மாதம் புத்தகத் திருவிழா சிறப்பாக 9 தினங்கள் நடத்தப்பட்டது. இதில் ரூ.3 கோடிக்கு மேற்பட்ட மதிப்பிலான புத்தகங்கள் விற்பனையாகியுள்ளது. திருநெல்வேலி மாவட்ட மக்கள் புத்தகம் வாசிப்பதில் அதிக விருப்பம் உள்ளவர்கள் என்பது தெளிவாகிறது. எந்த வகையிலாவது புத்தகங்களை படிப்பது சிறந்ததாகும். கோடை விடுமுறையில் குழந்தைகள் பேப்பர், புத்தகம் உள்ளிடவைகளை படிக்க வேண்டும்.இதனால் வாசிப்பு திறன் மேம்படுவதுடன் அறிவு திறனும் மேம்படும். ஒரு மாதத்திற்கு குறைந்தது 5 புத்தகங்களாவது படிக்க வேண்டும். இதன் மூலம் பொது அறிவும் வளர்ச்சியடையும். நூலகங்களிலும் செலவு இல்லாமல் புத்தங்களை எடுத்து படிக்கலாம். சிறு வயது முதல் பெரியவர்கள் வரை அனைவரும் புத்தகங்களை படிக்க வேண்டும். கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற உலக புத்தக தின விழாவையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவகள் தாமிரபரணியை போற்றும் விதமாக நடனமாடிய , மாணவ, மாணவிகளுக்கு நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன் என பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட நூலக அலுவலர் திரு.முனியப்பன், வாசக வட்ட தலைவர் திரு.மரியசூசை, வாசக வட்ட செயலாளர் திரு.கணபதி சுப்பிரமணியன், திருநெல்வேலி செஞ்சிலுவை சங்க தலைவர் டாக்டர் சார்லஸ் பிரேம்குமார், எழுத்தாளர்கள் திரு.நாறும்பூ நாதன், திருமதி.கலாபிரியா, பேராசிரியை. உஷாதேவி, மைய நூலக முதுநிலை நூலகர் திருமதி.வயலட், நூலக ஆய்வாளர் திரு.காஜாமுகைதீன் மற்றும் மாணவ, மாணவிகள், பொதுமக்கள், வாசக வட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள்தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.